# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12813/F/2024**

திரு.வெ.ராஜீ .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர்
(வீட்டுவசதி) அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
சேலம் மண்டலம், கிழக்கு கார்டன் தெரு,
பேர்லேண்ட்ஸ், சேலம்-636016.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.வெ.ராஜீ அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.ர.சித்திக் அலி, கூட்டுறவு சார்பதிவாளர் (வீட்டுவசதி), துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம், சேலம் மண்டலம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 25/07/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் சேலம் மாவட்டம் ஸ்ரணபுரி கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் லிமிடெட் (எஸ்.866) தமிழ்நாடு அரசு கூட்டுறவு வீட்டுவசதி துறையின் கீழ் இயங்கும் நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1883-ன்

கீழ் பதிவு செய்த வருடம், மாதம், தேதி, அன்றைய செயலாளர், மொத்த உறுப்பினர்கள், நிறுவனத்தின் அப்போதைய / இப்போதைய முகவரி ஆகியவைகளின் விவரங்கள் என்பன போன்ற தகவல்களை 10 இனங்களில் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை. மனுதாரர் தனக்கு தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 31.08.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 24.09.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 30.09.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 24.09.2024 மற்றும் 02.12.2025 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு சரியான தகவல் கிடைக்கவில்லை என்றும் சரியான தகவலை பெற்று தருமாறு கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் அரசு உதவி பெறும் கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே பொது அதிகார அமைப்பின் கீழ் வரும் என்றும் எனவே பொதுத்தகவல் அலுவலரால் 24.09.2024 மற்றும் 02.12.2025 நாளிட்ட கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்களை இவ்வாணையம் ஏற்கிறது இருப்பினும் கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவல்களுக்கு உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுதகவல் அலுவலர் திருமதி.பெ.ரேவதி, கூட்டுறவு சார்பதிவாளர் (வீட்டுவசதி) / அலுவலகம், சேலம் மண்டலம் அவர்களுக்கு சட்ட பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 18.06.2026 அன்று அப்போதைய பொதுதகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12813/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர்
(வீட்டுவசதி) அலுவலகம்,
சேலம் மண்டலம், கிழக்கு கார்டன் தெரு,
பேர்லேண்ட்ஸ், சேலம்-636016.

**திருமதி.பெ.ரேவதி,**
**அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,**
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர்
(வீட்டுவசதி) அலுவலகம்,
சேலம் மண்டலம், கிழக்கு கார்டன் தெரு,
பேர்லேண்ட்ஸ், சேலம்-636016.
**(தற்போதைய பொதுதகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.வெ.ராஜீ,
148 செங்கல்பேட்டை,
நரஜோதி பட்டி கிராமம்,
சேலம்-636004.

Copy to file: KR/PA